மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை விதி 54-ன் கீழ் கவன ஈர்ப்பு மூலமாகவோ உரிமைப் பிரச்சனை மூலமாகவோ கேளுங்கள். சட்டப்பேரவை விதிமுறைகளை வேண்டுமானால், ஒரு காப்பி கொடுக்கச் சொல்கிறேன்.

(இ) தஞ்சையில் விவசாயிகள் பாதிப்பு.

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே உள்ள விவசாயிகள் கடும் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படி திடீர் திடீரென்று எழுந்து கேட்டால் தஞ்சை மாவட்டத்திலே பாதிக்கப்பட்டவர்களுக்கு நான் அனுதாபம்தான் தெரிவிக்க முடியும், நான் அவ்வளவுதான் செய்ய முடியும், வேறு ஒன்றும் செய்யமுடியாது. வரைமுறைகளின்படி அவைகளைக் கொண்டுவாருங்கள். ஒரு மணி நேர விவாதம் வேண்டுமானால் கேளுங்கள். அதை அனுமதிப்பதற்கு நான் முயற்சி எடுக்கிறேன். அந்த உதவியைத் தான் நான் செய்யமுடியும். நாளையிலிருந்து எல்லாம் எடுத்துக் கொள்ளலாம்.

(ஈ) வி. ஐ. பி-க்களுக்காக ஒதுக்கப்பெற்ற மின் தூக்கியில் சட்டமன்ற உறுப்பினர்களை அனுமதிப்பது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் பாதிக்கப்பட்டுள்ள விஷயமாக இருப்பதால் நான் தெரிவிக்கிறேன். 24 ஆம் தேதி அன்று மாலை 4-30 மணிக்கு புதிய பில்டிங்கிற்கு நான் சென்று கொண்டிருந்தேன். அங்கே இதுவரைக்கும் எம். எல். ஏ.க்கள் தாராளமாக லிப்டில் போய்க்கொண்டு இருந்தோம். யாரும் தடுத்து நிறுத்துவது இல்லை. ஆனால் அன்றைக்கு நான் போனபோது அங்கே இருந்த, காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்த ஒரு போலீஸ்காரர் 'மேடம், மேடம் போகாதீர்கள், என்று சொன்னார். அய்யா, நான் எம் எல். ஏ. அய்யா என்று நான் சொன்னேன். நான் அதிகாரிகளிடத்திலே சில வேலைகளுக்காகச் செல்கிறேன் என்று சொன்னவுடன் உங்கள் பாஸைக் காட்டுங்கள் என்று சொன்னார். உடனே நான் பாஸை எடுத்துக் கொடுத்தேன். அவர் கேவலமான முறையிலே, வேறு எதுவும் வார்த்தை பேசவில்லை, இதில் வி. ஐ. பி. தான் போகலாம் என்று சொன்னார். இந்த பாஸை கையில் வைத்துள்ள எம்.எல்.ஏ.க்கள் எல்லாம் வி.ஐ.பி.-க்களா இல்லையா என்று கேட்க விரும்பு கிறேன்.